# கலைஞரும் நானும் 20

**“பன்முகத் திறமை கொண்ட மிகப்பெரிய ஆளுமை. அதேநேரத்தில் காலத்துக்கு ஏற்ப, மாற்றங்களை ஏற்றுக் கொண்டவர். இளைஞர்களுக்காக சிந்தித்தது மட்டுமல்ல, இளைஞராகவும் சிந்தித்தவர் கலைஞர். அவரது எழுத்துகளில் அந்தக் குறும்புகளைக் காணலாம்" என கலைஞருடன் தனக்கு ஏற்பட்ட அனுபவங்களைப் பகிர்கிறார் ஓவியர் மணியம் செல்வன்.**

■ ஓவியர் மணியம் செல்வன்



## “காதலர் ஊடலில் கட்டுப்பாடுகளைத் தளர்த்துங்க...”

“பொது நிகழ்ச்சிகளில் சகஜமாக கலந்துகொள்வதிலும் பெரிய மனிதர்களுடன் நெருக்கமாக இருப்பதிலும் நான் கொஞ்சம் கூச்ச சுபாவம் கொண்டவன். ஆனால், கலைஞர் அவர்களுடன் மட்டும் அந்தத் தடை எனக்கு உடைந்தது. எல்லா தடைகளையும் உடைத்து வளர்ந்தவர் அவர் என்பதால், மற்றவர்களின் தயக்கங்களை அவரால் உணர்ந்துகொள்ள முடியும். அப்படித்தான் எனது தயக்கத்தையும் போக்கி, அவரோடு பயணிக்க வைத்தார்.

முரசொலி மாறன் அவர்களின் ‘மேகலா பிக்சர்ஸ்’ நிறுவனம் தயாரித்த **‘காஞ்சித் தலைவன்’** திரைப்படத்தின் விளம்பர போஸ்டர்களை வடிவமைத்தவர் எனது தந்தை **மணியம்.** அப்போது பள்ளிச் சிறுவனாக இருந்த நான், அப்பா எங்கு சென்றாலும் கூடவே செல்வேன். அந்தப் பட வேலைகள், பிறகு ‘முரசொலி’ மலர்களுக்கு வரைய, ‘முரசொலி’ அலுவலகத்துக்கு எனது அப்பா அவ்வப்போது செல்வார். அந்த சமயத்தில் நானும் கூடவே செல்வேன் என்பதால், ஒரு முறை கலைஞரைப் பார்த்தேன். அதாவது முதலமைச்சர் ஆவதற்கு முன்பே அவரை அறிவேன்.

### முழுமை பெறாத வாய்ப்புகள்

**‘சங்கத்தமிழ்’** நூல், தொடராக வந்தபோது அதற்கு சில ஓவியங்களை வரைவதற்காக அழைத்திருந்தார். ஆனால், அதற்கு அதிக படங்களை என்னால் செய்ய முடியவில்லை. அதன் பின்னர் **‘பொன்னர் சங்கர்’** தொடருக்கும் படம் வரைய அழைப்புவிடுத்தார். அதற்கும் படங்கள் வரைந்தேன். ஆனால் தொடர்ச்சியாக வரையவில்லை.

அவர் என்னிடமிருந்து மிக விரைவாக ஓவியங்களை எதிர்பார்த்தார். நான்தான் எனது வேலையின் பாணி காரணமாக அவர் எதிர்பார்ப்புக்குச் செய்ய முடியாமல் இருந்தேன். அவருடைய எழுத்துகளுக்குத் தொடர்ச்சியாகப் பல ஓவியர்களைப் பயன்படுத்தினாலும், யாரிடம் எதைக் கொடுத்து வாங்க வேண்டும் என்பதையும் மிகச் சரியாகக் கைக்கொண்டவர் கலைஞர். அந்த வகையில் எனக்கும், எனது ஓவியங்களுக்கும் அவரிடம் ஓர் இடம் இருந்தது.

**‘தொல்காப்பியப் பூங்கா’** எழுதிய சமயம் அதற்கு முழுமையாக நான் படம் வரைய வேண்டும் என விரும்பினார். கலைஞரிடமிருந்து எனக்கு அழைப்பு வந்ததும், கோபாலபுரம் வீட்டுக்குச் சென்று பார்த்தேன். “முழுமையாக நீங்களே வரைங்க, முடியுமா..?” என்று கேட்டார். நான் அப்போதும் என் வழக்கமான பதிலையே கூறினேன். “நேரத்தை இதுக்கு ஒதுக்கிச் செய்யுங்க. அதெல்லாம் முடியும்” எனக் கூறியதுடன், நான் எடுத்துச் சென்ற ஓவிய மாதிரிகளையும் கையோடு பார்த்துவிட்டு ஒகே செய்தார்.

**எழுத்துகளுக்குத் தொடர்ச்சியாகப் பல ஓவியர்களைப் பயன்படுத்தினாலும், யாரிடம் எதைக் கொடுத்து வாங்க வேண்டும் என்பதையும் மிகச் சரியாகக் கைக்கொண்டவர் கலைஞர்.**

### நேரம், வாக்குத் தவறாமை

அந்த நூலுக்கு ஓவியம் வரைவதற்குத் தொடர்ச்சியாக ஒருநாள் விட்டு ஒருநாள் சந்திக்கவேண்டும் என்றார். வரைந்த ஓவியம் மற்றும் அடுத்து வரைய வேண்டியவற்றின் அவுட்லைன் ஆகியவற்றை எடுத்துச் சென்று காட்டுவேன். “காலை 8 மணிக்கு எல்லாம் வந்துடுங்க” என்பார் கலைஞரின் உதவியாளர் சண்முகநாதன்.

அந்த நேரத்தைத் தவறவிட்டால், அவரை வீட்டில் சந்திக்க முடியாது. ‘முரசொலி’ அலுவலகம் அல்லது அறிவாலயம் என வேறு இடங்களில்தான் சந்திக்க முடியும். அதனால் நான் 7.45 மணிக்கே வீட்டுக்குச் சென்றுவிடுவேன்.

ஒருமுறை பத்து நிமிடம் தாமதமாகிவிட்டது. நான் ஆட்டோவில் கோபாலபுரம் வீடு சென்று இறங்கிய நேரத்தில், கலைஞரின் கார் அப்போதுதான் புறப்பட்டுச் சென்றது. அடுத்து என்ன செய்வது, ‘முரசொலி’ அலுவலகத்துக்கு அதே ஆட்டோவில் செல்லலாம் என யோசிக்கும் நேரத்துக்குள், ஒரு காவலர் வந்து, “நீங்க வந்தீங்க என்றால், அய்யா அழைத்து வரச் சொன்னார்” என்றார். இப்படி பிசியான நேரத்திலும், நமது வருகையை எதிர்பார்ப்பதும், அதற்கான மாற்று ஏற்பாடுகளைச் செய்து வைப்பதிலும் கலைஞரின் பன்மடங்கு ஆற்றல் எனக்கு ஆச்சரியம் ஏற்படுத்தியது.

அந்தக் காவலரே ஒரு வாகனத்தை ஏற்பாடு செய்து அனுப்பி வைத்தார். மற்றொருமுறை அவுட்லைன் ஓவியத்தைக் கையோடு திருப்பித் தரவில்லை. “இதுக்கு ரெஃபரன்ஸ் பார்த்துவிட்டு அனுப்பி வைக்கிறேன்” எனக் கூறிவிட்டார். மாலை 4 மணி வாக்கில், ஒரு வாகனத்தில் அந்த அவுட்லைன் ஓவியம் வீட்டுக்கு வந்து சேர்ந்தது. எந்தக் காரணத்தாலும் தன்னால் வேலைகள் தாமதம் ஆகக்கூடாது என கவனமாக இருப்பார். அவருடைய நேரம் தவறாமையும், விரைவாக வேலைகளை முடிக்க வேண்டும் என்கிற எண்ணமும், வாக்குத் தவறாமையும் எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடம்.

### எழுத்து வேகம்!

நான் ஒவ்வொரு படத்துக்கும் எடுத்துக்கொள்ளும் நேரம் அவருக்குப் பிடிக்காது. அதனால் வேகமாகவும் வேலையைச் செய்யுங்க என அறிவுரை அளிப்பார். எனது பாணி ஓவியத்தில் நான் சில கட்டுப்பாடுகளை வைத்திருப்பேன்.

இது தொடர்பாகப் பேச்சு நடந்த அடுத்த நாள் காலை, கலைஞரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. “ஓவியத்தில் நீங்க இவ்வளவு கட்டுப்பாடு வெக்கிறீங்களே... கோயில்களில் சிற்பங்களைப் பார்த்திருப்பீர்கள். அவற்றை நாம் எப்படி கலையியல் அம்சத்துடன் பார்க்கிறோம். அதுபோலத்தான் ‘காதல் மயக்கம், காதலர் ஊடல் ஆகியவற்றை வரையும் ஓவியங்களிலும், அந்தக் கலையியல் வெளிப்பட வேண்டும். அதனால் கொஞ்சம் கட்டுப்பாடுகளைத் தளர்த்துங்க” என விளக்கினார். அதன்பின்னர் அவர் எதிர்பார்ப்புக்கு ஏற்ப என்னால் வரைந்து கொடுக்க முடிந்தது.

“ஒரு வாரத்தில் எழுதிய நூலுக்கு, படம் வரைய ஒரு வருஷம் எடுத்துக்குவீங்க போலவே...” என்று என்னைச் செல்லமாகக் கடிந்து கொண்டிருக்கிறார். அப்படியும் அந்த நூலுக்கு என்னால் முழுவதுமாகச் செய்து கொடுக்க முடியவில்லை. ஆனால், அதிகமாக நான்தான் வரைந்தேன்.

எழுத்துக்கு இணையாக ஓவியங்களும் வேண்டும் என்கிற விதியை அவர் தளர்த்திக் கொண்டதில்லை. அவரது எல்லா தொகுப்புகளிலும் ஓவியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கும்.

### எப்போதும் ‘அப்டேட்’

கனிமொழி அவர்களின் திருமண அழைப்பிதழ், ‘செம்மொழி மாநாடு’ அழைப்பிதழ் உள்பட பல வடிவமைப்புகளுக்கு என்னைத் தேர்வு செய்யும் அளவுக்கு அவர் மனதில் இருந்திருக்கிறேன்.

இப்போதைய **தலைமைச் செயலாளர் இறையன்பு** அவர்கள் சுற்றுலாத்துறை பொறுப்பில் இருந்தபோது, அந்தத் துறைக்காக நிறைய ஓவியங்கள் செய்திருக்கிறேன். அவற்றைப் பார்த்த கலைஞர், “அவர்கிட்ட இருந்து எப்படி இவ்வளவு ஓவியத்தை வாங்குனீங்க” என கேட்டிருக்கிறார். இப்படி எனது ஓவியங்கள் மீது அவர் வைத்திருந்த மதிப்பு எனக்குப் பெரிய மகிழ்ச்சியை அளித்தது.

எழுத்தில் வேகம், அரசுப்பணி, கட்சிப் பணிகளின் பரபரப்புக்கு மத்தியில் அவர் தன்னை எப்போதும் உற்சாகமாக வைத்துக் கொண்டார். புதிய விஷயங்களைத் தெரிந்துகொள்வது, தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது என எதிலும் ‘அப்டேட்’தான்.

கணினி, ஃபேஸ்புக் ஆகியவற்றுக்கு வெகு சீக்கிரமே பொருத்திக் கொண்டவர். ஓவியம் வரையும் முறைகளிலும், நவீனக் கருவிகள் குறித்த புரிதல் அவருக்கு இருந்தது. சிலவற்றைக் கேட்டு ‘அப்டேட்’ ஆகிக் கொள்வார். அந்த வகையில் இந்த தலைமுறைக்குச் சவால் விட்டவர் கலைஞர்...!"

...பகிர்வார்கள்

## வகுப்பறை நாட்குறிப்பு!



**வ**குப்பறை அனுபவங்கள் தொடர்பாக, ஆசிரியர்களின் சமூக வலைதள பதிவுகள், நூல்கள் ஆகியவை கற்பித்தல்-கற்றல் தொடர்பாக, புதிய போக்குகளை உருவாக்க அவசியமானவையாக உள்ளன. சமீபகாலங்களில் அப்படியான நூல்கள் கவனம் பெற்று வருகின்றன.

ஆசிரியர் உதயலட்சுமி எழுதி இருக்கும் இந்த நூல், 6 முதல் 10-ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகள் தொடர்பானவை. ஒவ்வொரு குழந்தையின் புரிதலும் அனுபவமும், எதிர்பார்ப்புகளும் அவர்கள் சந்திக்கின்ற பிரச்சினைகளும் வெவ்வேறானவை. குறிப்பாக, ஒவ்வொரு வகுப்புக்கும் அந்த மனநிலை மாறுபடும். அந்த அடிப்படையில் மாணவர்களை அணுகுவது மிக அவசியமான ஒன்று என இந்த நூலின் மூலம் உதயலட்சுமி முன்வைக்கிறார். இந்த நூலை பாரதி புத்தகாலயம் வெளியிட்டுள்ளது.

இதுபோன்ற ‘வகுப்பறை நாட்குறிப்புகள்’ ஆசிரியர்களால் நிறைய எழுதப்பட வேண்டும்.

## :ப்ளாஷ்பேக்



### வடசென்னை இலக்கியம்!

**த**லைவர் கலைஞர், ஆற்காட்டார், எஸ்.பி.சற்குண பாண்டியன், எல்.பலராமன், ஈரோடு தமிழன்பன் ஆகியோர் பங்கேற்ற ‘தமிழர் திருநாள் விழா’ வடசென்னை



பாண்டிச் செல்வம்

தி.மு.க. இலக்கிய அணி சார்பில், 1995- ஆம் ஆண்டு பிப்ரவரியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ராபின்சன் பூங்காவுக்கு அருகிலிருந்த அண்ணா அரங்கத்தில் மக்கள் வெள்ளம் சூழ இவ்விழா நடைபெற்றது. முத்தமிழறிஞர் கலைஞர் உரையாற்றும் போது “இலக்கிய விழா என்றால், தென் சென்னைக்கு துளியும் சளைத்ததில்லை வட சென்னை என்பதை இவ்விழா நிரூபித்திருக்கிறது” என்று அவர் சொன்னது, நிகழ்ச்சி ஏற்பாடு செய்த எனக்குக் கிடைத்த பெரும் பாராட்டு.

**-பி.டி.பாண்டிச் செல்வம் எம்.ஏ., கழக வர்த்தகர் அணி இணைச் செயலாளர், தண்டையார்பேட்டை, சென்னை.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### சிறையில் திரைக்கதை!

**1964-ஆம் ஆண்டு, கலைஞர் கதை, வசனம் எழுதிய ‘பூம்புகார்’ திரைப்படம் வெளியானது. ‘இராமாயணம்’, ‘மகாபாரதம்’ இதிகாசங்களை வைத்தும், ‘பைபிள்’ கதைகளை வைத்தும் பல படங்கள் வெளியாவதைப் போல, தமிழ்க் காப்பியங்களை வைத்து ஏன் படம் எடுக்கக்கூடாது என கலைஞர் யோசித்தார். அந்த எண்ணத்தில் சிலப்பதிகாரத்தின் கதையை எழுதினார். “சிறைப் பறவையாக அடைக்கப்பட்டிருந்தபோது தான், ‘பூம்புகார்’ திரைக்கதை கருக்கொள்ளத் தொடங்கியது" எனக் குறிப்பிட்டார் கலைஞர். பொதுவாக எந்தச் சமூகத்தையும் இழிவோ, ஏளனமோ செய்வது மனிதப் பண்பாட்டுக்கே இழுக்கு என்கிற எண்ணத்திலிருந்தே தனது திரைக்கதைகளை உருவாக்கினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 131




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131